RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22253

OPEN ACCESS

# ஆற்றுப்படை நூல்களில் வழிபாட்டு மரபுகள்

**கு. சிந்து** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Worship Traditions in Aatruppadai Works

**K. Sindhu** [a, *]

[a] Department of Tamil, National College, Trichirappali-620001, Tamil Nadu, India

* Corresponding Author: sindhusammu2022@gmail.com

Received: 26.09.2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

Traditions are considered to be customs that have been followed since time immemorial without any reason. The tradition to be followed by the ancestors remains a remnant to this day and is a document to pass on to the next generation. God will be everywhere on the pillar and in every particle. Accordingly, the ancient people worshipped God everywhere with their hands. He knew the wonder that God could be seen in a living human being through fanaticism, offering the blessings of God to others in an unconscious state. That is why the tradition of a sacrificial man obeying God and giving blessings to the devotees as per the command of God is still accepted in the Tamil community to this day. In the Akam literature, the friend will support with virtue, as God Murugan is the cause of the woman-lead's lovesickness. Fanaticism and worship of God Murugan go hand in hand. It is well known that Shalini, a woman of the Eyinar tribal community, offered the blessings of Goddess Kotravai in Silapathikaram like a song and dance of the Kurinji land. It is said in Thirumurukaatruppadai that Kuramagal is in a frenzy in the town. It is said that God Muruga, the male deity, resides here among women. The society celebrated God in worship, regardless of the deity. Sacrifice is the creation of all things, regardless of whether it is a sacrifice of life or a material sacrifice to God, and to have a fixed mind that is capable of discerning anything.

**Keywords:** Traditions, God, Kurinji land, Thirumurukaatruppadai

## முன்னுரை

மண்ணும் புழுதியும், மரமும் செடிகளும், விலங்குகளும், பறவைகளும் இயற்கையின் எளிமையான அடையாளங்களோடு தம் வாழ்தலின் சத்தியங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சூழலில் வறுமையும், இயலாமையும் என்ற சிக்கல்களினூடே தம்முடைய வாழ்க்கையை தகவமைத்து வாழும் ஆற்றுப்படைக் கலைஞர்களின் தெய்வீக மரபுகளை இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது. அன்பு. கருணை, கூடிவாழ்தல், அருள், வழிக்காட்டல் போன்ற அறக்கூறுகளையெல்லாம் மனித இனம் தன்னுடைய இயல்பாகக் கொண்டு வாழவேண்டும். வழிபாடுகளும், நம்பிக்கைகளும் மனிதனின் மரபுகளாகத் தோய்ந்து காணப்படுகின்றது. ஆற்றப்படை கலைஞர்கள் பொருநர், பாணன், விறலி, கூத்தர் என்பவர்களாவார். இவர்களின் வழிபாட்டு மரபுகள் என்பவை மூடப்பழக்கவழக்கங்கள் அல்ல. அவை வாழ்தலின் அசைவுகள் ஆகும். எத்தனைf துன்பங்கள், இழிவுகள் வந்தாலும் வறுமையின் காரணமாக சிதைந்துவிடாமல் வழிபாட்டு மரபுகளினால் தன்னையே பாதுகாத்துக் கொள்கின்றனர். புலவராற்றுப்படையில் தான் பெற்ற அருளை மற்றவனும் பெறல்வேண்டும் என்பது பக்தியின் உச்சமாகக் கருதப்படுகிறது. வெறியாடுதல் பல்வேறு ஆடல்களின் மூலமாக விளங்குகின்றது. அந்த

உடல் அசைவுகளாக இன்று மாபெரும் நடனமாக உருவெடுத்துள்ளது. பலயிடுதல் என்பது சைவ உணவுகள் மட்டுமில்லாது அசைவ உணவுகளையும் படைத்து தன் மனக்கறையைப் போக்கிநின்றனர். பலிகளாகப் படைக்கப்படும் பூக்களையும், நிணத்தையும், கள்ளினையும் கடவுள் ஏற்பதாகவும் அதில் ஏதேனும் குறை இருந்தால் இறைவன் தண்டிப்பதாகவும் எண்ணினார்கள். இறந்த வீரர்களை தெய்வங்களாகப் போற்றினார்கள். சங்ககால மக்கள் அதன் வெளிப்பாடே பூவும், பொட்டும் இட்டு, குளிப்பாட்டி, மஞ்சலிட்டு, புகையூட்டி பூசை செய்யும் வழிபாடுகளாகும். எனவே நம்முடைய தமிழ்சமூகம் இயற்கையோடு இயன்றளவு ஒட்டியும், உணர்ந்தும் வாழக்கடமைப்பட்டுள்ளது. அதனாலேயே அவர்களின் விருப்பத்திற்கிணங்க அடுத்தடுத்த வழிகளில் தன்னைப் பாதுகாத்து வழிபாடுகளில் முன்னேற்றிச் செல்கின்றன. அதனாலேயே கலைஞர்களுக்கு பொறுமையும், ஆழ்ந்த அறிவும், ஆன்மீக சிந்தனையும் பெற்ற சிந்தனையாளர்களாக ஆற்றுப்படையில் வலம் வருகின்றனர்.

## வெறியாட்டு

வெறியாடுபவனை 'வேலன்' எனவும் அவனே 'முருகன்' எனவும் போற்றுவது அக்கால மரபு. வேலன் என்னும் பெயருடைய பூசாரிசாமி ஏறப்பெற்று வெறியாடல் புரிந்து நடக்க போகின்ற நிகழ்ச்சிகளைக் கூறுகின்றனர். அவன் பேச்சினை நம்பியே திருமண நிகழ்ச்சிகளும் நல்லநேரமும் உறுதி செய்யப்படும் என்பர். கே.ஏ. நீலகண்ட சாஸ்த்திரி, (Susila, 1987) பிற ஆற்றுப்படை நூல்களெல்லாம் பொருளுக்காக பாடப்பட்டது. திருமுருகாற்றுப்படை மட்டும் அருளுக்காகப் பாடப்பட்டது. இதனையே வள்ளுவர் பிறப்பாகிய அறியாமையிலிருந்து நீங்க செம்பொருளாகிய இறைவனை ஆய்ந்து உணருவதாகும் என்பார்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்

செம்பொருள் காண்பதறிவு" (Varadharasan, 2004)

புலம் - அறிவு புலத்திணையுடையவர் புலவராவார். இந்நூலுக்கு புலவராற்றுப்படை என்பதே பொருத்தமானப் பெயராகும். இதனை பிற்காலத்து எழுந்த புறப்பொருள் வெண்பாமாலை பின்வருமாறு கூறுகிறது.

"இருங்கண் வானத்து இமையோர் உழைப்

பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று" (Swaminatha Iyer, 1986)

குறமகளிர் வெறியாடல் நிகழ்த்துமிடத்தில் முருகனை வரவழைப்பாள். வெறியர் களத்தில் குறமகள் கோழிக் கொடியை நடுவாள். நெய்யும், வெண்சிறுகடுகும் அப்புவாள். மந்திரங்களைக்கூறுவாள். கையில் காப்பும், ஆட்டுக்கிடாயின் செந்நீரையும், வெண்பொரியையும் படைத்து குறிஞ்சிப் பாடலைப் பாடுவாள். குறிஞ்சி நிலத்திற்கேயுரிய வழிபாடாக நக்கிரர் வெறியாட்டினைக் குறிப்பிடுவார். இவ்வாறு குறமகளிரின் பூசனைகளை ஏற்று வேலன் முருகனின் அருளால் வெறியாடுவான். அப்பொழுது அன்பர்களுக்கு அருளையும் வழங்குவான்.

"முருகாற்றுப்படுத்த உருகெழுவியனகர்" (Swaminatha Iyer, 1986)

"வெறியறி சிறப்பின் செவ்வாள் வேலன்" (Thamizhannal, 2010)

இவ்வாறு முருகனை எண்ணி வெறியயர்கின்ற இடத்தில் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து வழிபடுவார். அவ்வழிபாடு நடப்பதற்கு ஒருவன் கையினில் வேலை ஏந்தி நிற்பான். இதனாலேயே இப்பெயர் ஏற்பட்டது. வேலனும் வெறியாட்டும் ஒன்றோடொன்று இணைந்த வழிபாடாகும். இது பழங்கால தெய்வவழிபாடாகும். 'வேலன் வெறியாட்டு' தமிழ் நூல்களில் பரவலாக காணப்படுகின்றன. ஆனால் உண்மையில் தமிழ்நாட்டில் நிகழ்ந்ததில்லை. ஆனால் மலையாள நாட்டில் வேலன் வெறியாட்டம் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாக பில். எல். சாமி குறிப்பிடுகின்றார் (Susila, 1987).

திருமுருகாற்றுப்படையில் சுட்டப்படுகின்ற வெறியாட்டு அகத்திணையிலும். புறத்திணையிலும் சுட்டப்படுகின்ற வெறியாடல்களின்றும் வேறானது ஆகும். சங்ககால தமிழகத்தில் நடந்த வேலன்

வெறியாட்டத்தின் வழிபாட்டுமுறைகள், மரபுகள், தமிழகத்தில் மறைந்து மலையாள நாட்டில் எஞ்சியிருப்பது மிகவும் வியப்புக்குரிய செயலாகும். முருகாற்றுப்படை "சென்றுபயன் எதிர்தல் என்பதன்றி வந்து பயன்தருதல்" என்பதாக அமைந்துள்ளது.

## பலியிடுதல்

பலியிடுதல் என்பது கடவுளுக்கு படைக்கப்படும் ஒருவகை வழிபாட்டு முறையாகும். இறைவனை மனதில் நிறுத்தி தன்கையில் கிடைத்தப் பெருள்களையோ, உணவினையோ கடவுளுக்கு படைத்து வேண்டுதலே பலியிடுதல் என்பதாகும். இது இருவகை முறைகளில் செய்யப்படுகிறது. 1. நெய் கலந்த வெண்ணெய் சோறு. இது சைவ உணவாகும். அடுத்து 2. பச்சிறைச்சியிடப்பட்ட நிணத்தால் சமைத்த உணவாகும். இந்த இருகோட்பாடுகளிலேயே இறைவனுக்கு பலியிடுதல் செய்யப்படுகிறது.

பலியிடுதல் செய்த உணவை நெருங்க பேய் மகளும் அஞ்சுவாள் என்பது திண்ணம். குருதி தூவிய நிறைந்த கள்ளொடு கூடிய பெரிய உணவை கடவுளுக்கு படைப்பார்கள் இதனை எறும்பும் மொய்க்காது. ஆனால் கரிய கண்களையுடை காக்கைகள் மட்டும் உண்ணுமாம்.

"கருங்கட் காக்கையொடு பருந்திருந்தார" (Susila, 1987).

இங்ஙனம் கடவுளுக்கு படைக்கப்பட்ட பின் காக்கைக்குக் கொடுப்பது நம்முடைய வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகும். இன்றும் வழிபாடுகளில் அமாவாசை, மற்றும் முக்கியமான தினங்கள், திதி, திவசம் மற்றும் சில தெய்வ வழிபாடுகளில் இறைவனுக்குகோ அல்லது முன்னோர்களுக்கோ படைத்து வழிபாடு செய்வார்கள். அதனை காக்கைக்கு படைத்து வழிபாட்டினை நிறைவுசெய்வார்கள். பொருநராற்றுப்படையில் பலிஉணவை வெறுத்து நிற்கும் காக்கைப்பற்றிக் கூறப்படுகிறது.

"செஞ்சோற்ற பலி மாந்திய
கருங்காக்கை கவவு முனையின்" (Swaminatha Iyer, 1986)

உயரமான தென்னை மரங்களில் காக்கைகள் நிற்கின்றன. அது இரத்தம் கலந்த பலியுணவை வெறுத்து இருந்தது. இவ்வாறு இறைவனுக்குப் படைக்கப்பட்டப் பொருள்களைக் காக்கைக்குக் கொடுப்பது வழிபாட்டு மரபுகளில் ஒன்றாக விளங்குகிறது. முதுப்பெண்டிர் நாழியில் நெல்லை எடுத்துச்சென்று சுளகில் இட்டு நீரும், பூவும் சொரிவார்கள்.

"யாழிசை இனவண் டார்ப்ப நெல்லொடு" (Dakshinamurthy, 2005)

இறைவனைக் கைதொழுது வணங்கும் போது நெல், மலர், குருதி எனப் பல வகையானப் பொருள்களையும் பலியிட்டு வழிபடுதல் தமிழரின் வழிபாட்டு முறைகளில் சிறந்தவையாகும்.

## தெய்வம் உறையுமிடங்கள்

இறைவனை எல்லாவிடங்களிலும் வைத்து வணங்கும் மரபை சங்ககால மக்கள் கொண்டிருந்தனர். மரங்களிலும், உயரப்பறக்கும் கொடிளிலும், பொதுவிடங்களிலும், குளங்களிலும், ஆறுகளிலும், மன்றங்களிலும், முச்சந்தி, நாற்சந்தி எனப் பலவிடங்களிலும் முருகனை வைத்து வழிபட்டனர். இதுபோலவே விநாயகர் வழிபாடும் இருந்தது.

"காடும்காவும் கவின் பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்ததியும் புதுப்பூங்கடம்பூம்
மன்றமும் பொதியினும் கந்துடை நிலையினும்" (Swaminatha Iyer, 1986)

ஆறுகளில் இறைவனைத் தொழுதனை மலைபடுகடாம் கூறுகின்றது. ஆற்றுவழியில் கோலில் இருந்ததனைக் கண்ட கூத்தர்கள் கடவுளை கைத்தொழுது வணங்கி நின்றனர்.

"ஓரியாற் றியவின் மூத்த புரிசைப்

பராவரு மரபிற் கடவுட் காணின்" (Swaminatha Iyer, 1986)

மேற்கூறிய வடிகளில் ஆற்றங்கரைகளில் கடவுளை கண்டு வணங்கி நின்றனர். ஆற்றங்கரையைக் கடந்து செல்லும்போது நாகபாம்புகளின் அச்சுறுத்தல்கள் ஏற்படும். அப்பொழுது அங்கு விறலியர்கள் தங்களுடைய அச்சத்தைப் போக்க பாம்புகளை வணங்கிச் சென்றனர்.

"கரந்து பாம்பு ஒடுங்கும் பயம்பு மாருளவே"

இடி, மின்னல், மழை, மற்றும் காட்டு விலங்குகள் போன்ற இயற்கைக் காரணிகளை மீறினால் இறப்பு ஏற்படும் எனக் கருதிய மனிதன் அதனையெல்லாம் தெய்வமாக வணங்கும் மரபைக் கொண்டிருந்தான். கடம்பமரத்தில் குடிக்கொண்ட முருகனை ஒத்த வீரத்தையுடையவன் இளந்திரையன் என பெரும்பாணாற்றுப்படையால் அறிய இயலுகிறது.

"பைஞ்சோறு மெழுகியபடிவ நன்னகர்"

இறைவனை வழிபடும் இடங்கள் சாணத்தால் மெழுகப்பட்டு இருந்தது. அத்தகைய தூய்மையான இடங்களிலேயே தெய்வம் குடிக்கொண்டிருக்கும் என்ற நம்பிக்கைக் கொண்டிருந்தனர் சங்ககால மக்கள்.

## நடுகல் வழிபாடு

போரில் உயிர்நீத்த வீரனின் நினைாக அவர்களுக்கு கல்நட்டு கடவுளாக வழிபட்ட மரபினை இலக்கியங்கள் பல பேசுகிறது. அவற்றுள் மூத்த நூலான தொல்காப்பிய பொருளதிகாரத்தில் வெட்சித்திணையில் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்ற ஆறு நிலைகளில் நடுகல்லிற்கு செய்யவேண்டியவற்றைக் கூறியுள்ளார்.

"காட்சிகால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு மரபில் கல்லொடு புணரச்"

மாடுகள் பண்டைய காலத்தில் செல்வமாகவேக் கருதப்பட்டன. எனவே பகைவரிடமிருந்து மாடுகளை காக்கும் முயற்சியிலீடுபட்டு உயிர்நீத்த கரந்தை வீரர்களுக்கே பெரும்பான்மை நடுகற்கள் நடப்பட்டன. பெண்ணொருத்தி நல்ல கணவனையும், நல்ல பகையும் வேண்டி நடுக்கல்லைக் கைத்தொழுது வணங்கினார்கள்.

"நடுகல் கைதொழுது பரவும்

விருந்து எதிர் பெறுகதில் யானே"

ஈமப்பொருளைக் குழியிலிட்டு ஒரு கல்லால் மூடிவிடுவர். அதற்கு பிறகு மேலே கூழாங்கற்கள் பரப்பப்பட்டன. இதவே புதைப்பொருள் ஈண்டுள்ள பதுகை அமைப்பாகும். அதன் மேலே வீரரின் புகழும், பெருமையும் பொறிக்கப்பட்டு இருக்கும்.

"நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்

செல்லிசை கவலை எண்ணுமிகப்பலவே" (Swaminatha Iyer, 1986)

பகைவர்களுடன் போர் புரிந்து உயிர் துறந்த வீரர்களின் புகழ் குறித்து நடப்பட்டுள்ள நடுகற்கள் நடப்பட்டது. வள்ளளைத் தேடி செல்லும்போது தன் சென்ற பாதையில் கண்டால் அதனை வணங்கி பாடலால் போற்றி கல்லிலிருக்கும் தெய்வம் மகிழும்படி கூத்தர்கள் செல்லவேண்டும். இதுபோல பாதைகளை அறியும் வண்ணம் அப்பாதையின் நுழைவுவாயிலில் அடையாளமாக ஊகம் புல்லை முடிந்து வைத்தனர். அச்சுறுத்தும் பாதை என்பதை உணர்த்தவே அடையாளப்படுத்தி விட்டுச்சென்றனர்.

"நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்

நிரை நிலை நடுகல்" (Dakshinamurthy, 2005)

இறந்த வீரர்களுக்கு நடுகற்கள் வைத்து அதனை குளிப்பாட்டி, பொட்டிட்டு, மாலை சூட்டி, மயிற்பீலிகளும் சூட்டப்பட்டு சங்ககால மக்கள் வணங்கி நின்றனர். இதுவே பிற்காலத்தில் இறந்தவர்களின் கல்லறை ஆக மாறியது. நிலத்தைக் கல்லில் கட்டுவதால் 'கல்லறை' எனப் பெயர்பெற்றது என தொல்லியர் ஆய்வாளர் விளக்கம் தருகிறார்.

இறந்த மனிதனுக்காக கல்லைப் பலகை போல் செதுக்கி சிறிய வாழ்விடம் என்றப் பொருளில் அறை என்ற சொல் நிலைப்பட்டிருக்கிறது.

காதலுற்ற தலைவியின் உடல் மெலிவதற்கு காரணமறியாததாய் வேலனை அழைத்து அனைத்துப் பொருள்களிலும் ஆவி உறையும் என்ற நம்பிக்கையே வெறியாட்டு எனப்படும். வேலனாட்டத்தின் அடிப்படை செய்தியாகும்.

## கடவுளர்க்குரிய மாலைகள்

சங்ககால மக்கள் இறைவனை கைத்தொழுது வணங்கி மகிழ்ந்தனர். இறைவனுக்கு உரிய மலர்கள். இறைவன் விரும்பும் மலர்கள் அச்சத்தைத் தரும் மலர்கள் என் மலர்களைப் பற்றி ஆற்றுப்படையில் செய்திகள் காணப்படுகிறது.

கடவுளர்க்குரிய மாலையில் வண்டுகள் மொய்க்காது, எறும்புகள் நெருங்காது. பேய்களும் நெருங்க அச்சம் தரும். என்ற கூற்றுகளுக்கிடமுண்டு. திருமாலுக்கு துளவம், சோழனுக்கு ஆத்தி, பாண்டியனுக்கு துளவம், சோழனுக்கு ஆத்தி பாண்டியனுக்கு வேம்பு, சிவனுக்கு கொன்றை என்பது போல் முருகனுக்கு உரிய மலராக காந்தள் விளங்குகிறது.

"சுரும்பும் மூசா சுடர்பூங் காந்தள்" (Swaminatha Iyer, 1986)

வண்டுகளால் எச்சில்படாத காந்தள்மலர்களால் ஆன கண்ணியையே முருகன் சூடியுள்ளான். இங்கு குரங்குகளும் ஏற இயலாத உயர்ந்த மரங்களையுடைய காடுகளைக் கொண்டது.

"கடவுளொண்பூ அடைதலோம்பி" (Swaminatha Iyer, 1986)

இறைவன் விரும்பும் மலராக தாமரையும் விளங்கியதனை இதன்மூலம் அறியமுடிகிறது. விழாக்களின் போதும் வெறியாட்டுதலின் போதும் புது மணலை பரப்புவார்கள். பலவகையான பூக்களால் அழகுப்படுத்துவார்கள் பசுந்தழையும் கடம்ப மலரும் கொண்டு பந்தல் அமைப்பார்கள்

"நாழிகொண்ட நறுவீ முல்லை" (Dakshinamurthy, 2005)

முல்லைப்பூவானது திருமாலுக்கு படைத்து முதுப்பெண்டிர் விரிச்சிகேட்டு நிற்பாள். இதுபோல காந்தள், முல்லை, தாமரை போன்ற மலர்கள் இறைவனுக்கு படைக்கும் மலர்களாக பெரிதும் போற்றப்படுகின்றனர்.

## முடிவுரை

ஆற்றுப்படை நூல்களில் வழிபாட்டு மரபுகள் ஆங்காங்கே பொன் நகைகளில் பதித்த வைரக்கற்களைப் போலக் காணப்படுகின்றன. திருமுருகாற்றுப்படை முழுவதும் அருளுக்காகவே புலவனை ஆற்றப்படுத்தியது ஆகும். இதனை தமிழ் இலக்கியங்களில் வெறியாட்டு எனக் கூறுகின்றனர். வெறியாட்டு பெரும்பாலும் வேலனால் நிகழ்த்தப்படுதலாகும். இங்கு குறமகள் வெறியாடுவது சிறுபான்மையே. மக்கள் மிகுந்த அச்சத்தின் காரணமாகவும் இயலாமையினாலும் கண்ணில் கண்ட பொருளை கடவுளாக வணங்குகின்றனர். கூத்தர்களும், பாணர்களும், விறலியர்களும் இசையில் வல்லவர்களாகத் திகழ்ந்தாலும் அவர்களின் வறுமை என்பது அவர்களின் நிழல் போலத்

தொடர்கிறது. வளமையைத் தேடி வள்ளலை நாடிச்செல்லும் பறவைகளாக இவர்கள் ஆற்றுப்படையில் வலம் வருகின்றன. அங்ஙனம் அவர்கள் பக்தியின் மிகுதியால் திளைத்ததற்கான ஆதாரங்களான வெறியாடுதல், கடவுளுக்கு உணவுப்படைத்தல், அதனை காக்கைகள் உண்டால் தெய்வம் ஏற்றுக் கொண்டுவிட்டது என்ற துணிதல், பலி உணவுகளாக வெண்ணெல் சோறும், இரத்தம் கலந்த உணவுகளும் இறைவனுக்கு படைக்கப்பட்டு, எச்சில்படாதத் தூய பதார்த்தங்களை படைத்தனர். தன் மூச்சுக்காற்றால்கூட முகர்ந்து பார்க்காத மலர்களை கடவுளுக்கு படைத்து மகிழ்ந்தனர். துன்பம் வரும் வேளைகளில் நிலத்திற்குரிய தெய்வங்களை மனத்தால் நினைத்து கைத்தொழுது வணங்கிச் சென்றார்கள். இல்லையென்றால் நமக்கு மேல் ஒரு சக்தி இருக்கின்றது. ஆற்றல் இருக்கின்றது. அவை வேறெதுமில்லை. கடவுளே என நினைத்துத்தான் ஐந்திணைகளுக்கும் ஐந்து கடவுள்களை வழிபட்டான். தமிழன். தன்னுடைய மனக்கவலையை மாற்றுவதற்கும், தன்னுடைய நிலையை ஏற்றுக்கொள்வதற்கும் நேர்த்திக்கடன்களான பலியிடுதலும், வெறியாடுதலும் செய்து வழிபாட்டு மரபுகளாக மேற்கண்ட முறைகளைக் கொண்டிருந்தான்.

## References

Dakshinamurthy, A. (2005) Tamilar Nagarigamum Panpadum, Yaal Veliyedu, Chennai, India

Susila, G. (1987) Sanga Ilakiyathil Nimithangal, Balaji Pathippagam, Madurai, India

Swaminatha Iyer, U.V. (1986) Pathupaattu Moolamum Uraiyum, U.Ve.Sa Library, Chennai, India.

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License